குன்றத்தூர் நகராட்சி

நாள்.10.01.2025

**கூட்டம் எண்.1/2025**

# சாதாரணக் கூட்டம்

குன்றத்தூர் நகராட்சியின் ஜனவரி-2025ம் மாதத்திற்கான சாதாரணக்கூட்டம் 10.01.2025ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

குன்றத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர்-2024, நவம்பர்-2024 மற்றும் டிசம்பர்-2024ம் மாதத்திற்கான தினசரி நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.749 நாள்.10.01.2025**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

குன்றத்தூர் நகராட்சியின் அக்டோபர்-2024, நவம்பர்-2024 மற்றும் டிசம்பர்-2024ம் மாதத்திற்கான பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவைகள் |
|---|---|---|---|
| அக்டோபர்-2024 | - | 18 | - |
| நவம்பர்-2024 | - | 21 | - |
| டிசம்பர்-2024 | - | 30 | - |

**தீர்மானம் எண்.750 நாள்.10.01.2025**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

குன்றத்தூர் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் கேட்பு, வசூல், நிலுவைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| வரியினம் | கேட்பு ரூ (லட்சத்தில்) | வசூல் ரூ.(லட்சத்தில்) | நிலுவை ரூ.(லட்சத்தில்) |
|---|---|---|---|
| சொத்துவரி | 471.77 | 277.21 | 194.63 |
| காலியிட வரி | 200.94 | 129.67 | 71.27 |
| தொழில்வரி | 36.78 | 16.00 | 20.78 |
| குடிநீர் கட்டணம் | 46.71 | 14.93 | 31.78 |
| வரியில்லா இனம் | 5.85 | 1.79 | 4.06 |
| திடக்கழிவு மேலாண்மை வரி | 79.19 | 35.39 | 43.80 |

**தீர்மானம் எண்.751 நாள்.10.01.2025**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது**

**<u>பொருள் எண்.4</u>**

குன்றத்தூர் நகராட்சியின் அக்டோபர்-2024, நவம்பர்-2024 மற்றும் டிசம்பர்-2024ம் மாத செலவுசீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

அக்டோபர்-2024 - செ.சீ.எண்.550 முதல் 665 வரை - பொதுநிதி மற்றும் திட்டநிதி
செ.சீ.எண்.90 முதல் 98 வரை - குடிநீர் விநியோகம்

நவம்பர்-2024 - செ.சீ.எண்.666 முதல் 738 வரை - பொதுநிதி மற்றும் திட்டநிதி
செ.சீ.எண்.99 முதல் 106 வரை - குடிநீர் விநியோகம்

டிசம்பர்-2024 - செ.சீ.எண்.739 முதல் 788 வரை -பொதுநிதி மற்றும் திட்டநிதி
செ.சீ.எண்.107 முதல் 110 வரை குடிநீர் விநியோகம்

**தீர்மானம் எண்.752 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.5</u>**

குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிவுநீர் டேங்கர் கொள்முதல் செய்ய ரூ.43.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண். 26740/2024/SBM-1நாள்.09.11.2024ன்படி நிர்வாக அனுமதி அளித்து வரப்பெற்றுள்ளது. மேற்காணும் பணிக்கு 29.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை தொடர்ந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடுத் தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா (SBM) திட்டத்தின் கீழ் கழிவுநீர் டேங்கர் (Cesspool tanker) கொள்முதல் செய்தல். | 43.25/- | Thakshi Infra | குறைவு |
| | | | RR Constructions | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு -</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1060/2024/இ1)

**தீர்மானம் எண்.753 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

## <u>பொருள் எண்.6</u>

குன்றத்தூர் நகராட்சியில் 2024-25ம் ஆண்டு குடிநீர் நிதி மற்றும் பொதுநிதியின் கீழ் 06.12.2024 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | கன்னியப்பன் நகர், அங்காள பரமேஸ்வரி நகர், எம்.ஜி.ஆர் நகர், மீனவர் தெரு, வேம்புலி அம்மன் கோயில் தெரு, ஜெகநாதபுரம், சேக்கிழார் நகர், ராஜேஸ்வரி நகர், சர்ச் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் பராமரிப்பு பணியின் போது குடிநீர் பகிர்மான குழாய் உடைபட்டதால் புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 1250000 | SVB Electricals | குறைவு |
| | | | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | அதிகம் |
| 2 | மூன்றாம்கட்டளை, ஒண்டிக்காலனி மற்றும் குன்றத்தூர் பேருந்து நிலையம் பகுதியில் புதியதாக கேபிள் பதிக்கும் பணியின்போது குடிநீர் பிரதான குழாய் உடைபட்டதை சரிசெய்யும் பணி | 250000 | SVB Electricals | குறைவு |
| | | | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | அதிகம் |
| 3 | திருமலை நகர் ரேஷன் கடை அருகில் புதியதாக ஆழ்துளை கிணறு மற்றும் மினி பவர் பம்ப் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணி | 780000 | SVB Electricals | குறைவு |
| | | | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | அதிகம் |
| 4 | வேம்புலி அம்மன் கோவில் தெரு, மீனவர் தெரு, திருநாகேஸ்வரம் காலனி, சர்ச் தெரு, ஜெகநாதபுரம், ராஜேஸ்வரி நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணியின் போது உடைபட்ட சின்டெக்ஸ் டேங்க் மற்றும் E.B.பாக்ஸ் மற்றும் சின்டெக்ஸ் பெட் ஆகியவற்றை புதியதாக அமைக்கும் பணி | 650000 | SVB Electricals | குறைவு |
| | | | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | அதிகம் |
| 5 | கண்ணம்மாள் நகர் பேஸ்-1, கண்ணம்மாள் நகர் பேஸ்-2, கண்ணம்மாள் நகர் பேஸ்-3, ஐஸ்வர்யம் நகர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணற்றில் கேபிள் மற்றும் பிரதான குழாய் மற்றும் மோட்டார் பேனல்போர்டு பழுதடைந்து விட்டதால் அதை புதியதாக மாற்றும் பணி | 930000 | SVB Electricals | குறைவு |
| | | | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | அதிகம் |
| 6 | போஸ்ட் ஆபீஸ், சத்தியமூர்த்தி நகர், வர்ஷா நகர் மற்றும் பொன்னியம்மன் கோயில் அருகில் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணற்றில் கேபிள் மற்றும் பிரதான குழாய் மற்றும் மோட்டார் பேனல்போர்டு பழுதடைந்து விட்டதால் அதை புதியதாக மாற்றும் பணி | 900000 | SVB Electricals | குறைவு |
| | | | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு -</u> அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.2054/2024/இ1)**

## தீர்மானம் எண்.754 நாள்.10.01.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**பொருள் எண்.7**

குன்றத்தூர் நகராட்சியில் 2024-25ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 09.12.2024 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | மூன்றாம்கட்டளை தேவி கருமாரியம்மன் நகரில் பேவர் பிளாக் அமைத்தல் | 400000 | S.முருகன் | குறைவு |
| | | | ரமேஷ் ஏஜென்சீஸ் | அதிகம் |
| 2 | பெரியார் நகர் மற்றும் அண்ணா நகர் பேவர் பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல். | 1980000 | S.சங்கர் | குறைவு |
| | | | ரமேஷ் ஏஜென்சீஸ் | அதிகம் |
| 3 | நத்தம் பெருமாள் கோயில் குறுக்கு தெரு மழைநீர் வடிகால் அமைத்தல். | 1960000 | எழிலரசி | குறைவு |
| | | | ரமேஷ் ஏஜென்சீஸ் | அதிகம் |
| 4 | நத்தம் கொல்லை தெரு சிமெண்ட் சாலை அமைத்தல். | 1980000 | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | இ.சேகர் | அதிகம் |
| 5 | ஐஸ்வர்யம் நகர் மெயின் ரோடு மழைநீர் வடிகால் அமைத்தல். | 1990000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | S.முருகன் | அதிகம் |
| 6 | பாலவராயன் குளம் குறுக்கு தெற்கு பக்கம் சுற்றுச்சுவர் அமைத்தல். | 1600000 | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | இ.சேகர் | அதிகம் |
| 7 | வேல் நகர் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1980000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | C.N.இராமச்சந்திரன் | அதிகம் |
| 8 | மேத்தா நகர் 1வது மற்றும் 3வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல். | 1980000 | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | இ.சேகர் | அதிகம் |
| 9 | பொன்னியம்மன் கோயில் குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 1980000 | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | இ.சேகர் | அதிகம் |
| 10 | ராஜகணபதி நகரில் கால்வாய் உயர்த்தி சிலாப் அமைத்தல். | 1920000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | C.N.இராமச்சந்திரன் | அதிகம் |

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2054/2024/இ1)

**தீர்மானம் எண்.755 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.8**

குன்றத்தூர் நகராட்சியில் 2024-25ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 10.12.2024 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சியில் நுண் உரமாக்கல் மையத்தில் (Micro Compost Centre) உரமாக்கல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும், பொருட்கள் சேகரிப்பு மையத்தில் (Resource Recovery Park) Bailing பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும் வெளிக்கொணர்வு முறையில் 15 எண்ணிக்கை தற்காலிக பணியாளர்களை பணியமர்த்துதல் | 1500000 | KRS Service | குறைவு |
| | | | Srivari Enterprises | அதிகம் |

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2054/2024/இ1)

**தீர்மானம் எண்.756 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.9</u>**

குன்றத்தூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2024-25 Health Grant-ன் கீழ் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் சுகாதார மையக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26154/2024/EA-2 நாள்.03.10.2024ன்படி நிர்வாக அனுமதி அளித்து வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 17.12.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்த பதிவேட்டினை பார்வையிட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | <u>15வது நிதிக்குழு சுகாதார மான்யம் 2024-2025</u> குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் சுகாதார மையக் கட்டிடம் கட்டுதல் | 6000000/- | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | M.கார்த்திக் | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு -</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.4311/2024/இ1)**

## தீர்மானம் எண்.757 நாள்.10.01.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**பொருள் எண்.10**

குன்றத்தூர் நகராட்சியில் 2024-25ம் ஆண்டு குடிநீர் நிதி மற்றும் பொதுநிதியின் கீழ் 20.12.2024 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | அபிராமி நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு, மின்மோட்டார் மற்றும் பகிர்மான குழாய் அமைத்தல் | 800000 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |
| 2 | ஒண்டிக்காலனி, ஆண்டாங்குப்பம், மாணிக்கம் நகர், சேக்கிழார் நகர், பொன்னியம்மன் கோயில் தெரு, திருமலை நகர் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக சிறு மின் விசைப் பம்பு பொருத்தி, சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 1250000 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |
| 3 | மணிகண்டன் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் 2 இடங்களில் உறை கிணறு, மின்மோட்டார், பேனல் போர்டு மற்றும் கேபிள் அமைத்தல் | 950000 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |
| 4 | குடிநீர் வால்வுகள் பொருத்துதல் - மேத்தா நகர் மெயின் ரோடு – 100mm வால்வு – 2 , மேத்தா நகர் கிழக்கு 5வது தெரு - 100mm வால்வு – 2, மேத்தா நகர் மேற்கு 5வது தெரு - 100mm வால்வு -2, மேத்தா நகர் 18வது கிழக்கு தெரு - 100mm வால்வு -1 , மேலாண்டை தெரு - 100mm வால்வு -1 , அங்காள பரமேஸ்வரி நகர் - 100mm வால்வு -2 , ஸ்ரீமதி நகர் பைபாஸ் அருகில் - 100mm வால்வு -2 , ஒண்டிக்காலனி - 100mm வால்வு – 3, ராஜகணபதி நகர் - 100mm வால்வு – 2, மணஞ்சேரி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி - 100mm வால்வு – 1, அம்பாள் நகர் - 100mm வால்வு – 1 , நத்தம் - 100mm வால்வு – 1 , பூஜா அவென்யூ - 125mm வால்வு – 2, கரைமாநகர் மெயின் ரோடு - 100mm வால்வு – 2, பத்மாவதி நகர் - 100mm வால்வு – 1, ஒண்டிக் காலனி - 100mm வால்வு – 4, ஆண்டாங்குப்பம் – 100mm வால்வு – 1, ஒண்டிக்காலனி கிணறு – Non Return Value 100mm – 2, ஒண்டிக்காலனி தரைமட்ட நீர் தேக்க தொட்டி – Non Return Value 100mm – 2 | 1100000 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |
| 5 | ஒண்டி காலனி திறந்த வெளிக்கிணறு – 12.5 HP மின்மோட்டார், ஒண்டி காலனி தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி – 10 HP மின்மோட்டார், திருமலை நகர் – 5 HP மின்மோட்டார், பொன்னியம்மன் கோயில் தெரு – 5 HP மின்மோட்டார், மோகலிங்கம் நகர் – 2 HP மின்மோட்டார் மற்றும் ஸ்டாட்டர், பைப், கேபிள் அமைத்தல் | 900000 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | மணஞ்சேரி பெட்ரோல் பங்க் அருகில், சேக்கிழார் நகர், அங்காளபரமேஸ்வரி நகர், கன்னியப்பன் நகர், லட்சுமி நகர், மேத்தா நகர் மெயின் ரோடு, வர்ஷா நகர், ஆதிகாலனி, ஜெகநாதபுரம், இராஜேஸ்வரி நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக மழைநீர் கால்வாய் அமைக்கும் பொழுது பைப்லைன் துண்டிப்பு ஏற்பட்டுள்ளதால், அப்பகுதிகளில் புதியதாக 90mm PVC பைப் அமைத்தல் | 1100000 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |
| 7 | சேக்கிழார் நகரில் புதிய சின்டெக்ஸ் டேங்க் அமைத்து EB பாக்ஸ் கேபிள் மற்றும் பைப் அமைத்தல் | 120000 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |
| 8 | திருப்பதி நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் மற்றும் டேங்க் EB பாக்ஸ் கேபிள் பைப் அமைத்தல் | 700000 | ஆகாஷ் எலக்ட்ரிகல்ஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2054/2024/இ1)

**தீர்மானம் எண்.758 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.11**

குன்றத்தூர் நகராட்சியில் 2024-25ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 23.12.2024 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு 1 முதல் 15 வார்டு வரை பழுதடைந்த சாலையினை வெட்மிக்ஸ் கொண்டு சமன் செய்தல் | 1500000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |
| 2 | வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு 16 முதல் 30 வார்டு வரை பழுதடைந்த சாலையினை வெட்மிக்ஸ் கொண்டு சமன் செய்தல் | 1500000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |
| 3 | குன்றத்தூர் நகராட்சி பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடம் -3 எண்ணிக்கை மற்றும் 1 எண்ணக்கை கட்டண கழிப்பிடம் ஆகியவற்றிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 1960000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |
| 4 | குன்றத்தூர் நகராட்சி நவீன எரிவாயு தகன மேடை அமைந்துள்ள இடத்தில் செடிகள் அமைத்தல், Gate, Arch அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 1450000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | SVB Electricals | அதிகம் |

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2054/2024/இ1)

**தீர்மானம் எண்.759 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.12**

குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் 100 சதவிகிதம் திறந்த வெளியில் மலம் கழித்தல் (Open Defecation Free + +) இல்லாத நகராட்சியாகவும், தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குன்றத்தூர் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மத்திய அரசின் (MOUD) துறையினரிடமிருந்து 3 Star Rating அந்தஸ்து பெறுவதற்கும் மற்றும் மலகசடு நீர் மற்றும் கழிவு நீர் இல்லாத நகராட்சியாக (Water + ) சுய பிரகடனம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேலும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சி (Open Defecation Free + +), குப்பையில்லாத நகராட்சி (Garbage Free City) மற்றும் மலகசடு நீர் மற்றும் கழிவு நீர் இல்லாத நகராட்சி (Water + ) பிரகடனப்படுத்துதல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணை மற்றும் கருத்துகள் பெறுவதற்கு நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், இச்செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.2054/2024/எச்1)**

**தீர்மானம் எண்.760 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.13**

குன்றத்தூர் நகராட்சியின் ஆணையர் பயன்பாட்டிற்கான பொலீரோ வாகனம் எண்.TN 85 U 4504-க்கு மூன்றாம்நிலை பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு M/s.Marudhar Mishri Motors LLP, சென்னை – 600056 நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து வாகனம் பராமரிப்பு பணி முடிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விவரம் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஆணையர் பயன்பாட்டிற்கான பொலீரோ வாகனம் மூன்றாம்நிலை பராமரிப்பு பணி | M/s.Marudhar Mishri Motors LLP | RO25A013510 / 08.11.2024 | 11799.71/- |

எனவே மேற்காணும் விவரப்படி பொலீரோ வாகனம் பழுதுநீக்கம் செய்தமைக்கு அவசர அவசியம் கருதி M/s.Marudhar Mishri Motors LLP, சென்னை-600056 நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.11800/-ஐ நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1582/2023/இ1)**

## தீர்மானம் எண்.761 நாள்.10.01.2025

## ஒப்புதல் அளிக்கப்படுகிறது

**பொருள் எண்.14**

குன்றத்தூர் நகராட்சியின் நகராட்சி பொறியாளர் பயன்பாட்டிற்கான பொலீரோ வாகனம் எண்.TN 85 U 9451-க்கு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு M/s.Marudhar Mishri Motors LLP, சென்னை - 600056 நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து வாகனம் பராமரிப்பு பணி முடிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விவரம் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் பயன்பாட்டிற்கான பொலீரோ வாகனம் பராமரிப்பு பணி | M/s.Marudhar Mishri Motors LLP | RBV25A003202 / 15.11.2024 | 31725/- |

எனவே மேற்காணும் விவரப்படி பொலீரோ வாகனம் பழுதுநீக்கம் செய்தமைக்கு அவசர அவசியம் கருதி M/s.Marudhar Mishri Motors LLP, சென்னை-600056 நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.31725/-ஐ நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1582/2023/இ1)**

**தீர்மானம் எண்.762 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.15</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பஜார் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து வார்டு எண்.4, 8, 9, 15, 21, 22, 23, 24 ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் திட்டத்தின் பஜார் தெருவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை இடித்து புதியதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணி நடைபெற இருப்பதால் மேற்படி பகுதிகளுக்கு ஒண்டிக்காலனி குடிநீர் விநியோக தொட்டியில் இருந்து மின் மோட்டார் மூலம் நேரடியாக குடிநீர் விநியோகம் செய்ததை ஆய்வு செய்யப்பட்டதில் வார்டு எண்.8 பெரிய தெரு, வார்டு எண்.9 சின்னத்தெரு மற்றும் வார்டு எண்.15 துலுக்கத்தெரு ஆகிய பகுதிகளுக்கு போதுமான அழுத்தம் இல்லாததால் குடிநீர் விநியோகம் சீராக செய்ய இயலவில்லை.

எனவே மேற்படி பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய ஒண்டிக்காலனி நீர்த்தேக்க தொட்டியில் புதியதாக மின்மோட்டார், மற்றும் ஒண்டிக்காலனி, அம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் இரண்டு வால்வுகள் பொருத்துவதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2056/2024/இ1)

**தீர்மானம் எண்.763 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.16</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மலையடிவாரத்தில் நகராட்சிக்கு சொந்தமான வாகன நிறுத்துமிடத்தில் 15.01.2025 முதல் கட்டணம் வசூலித்துக்கொள்ளும் உரிமத்திற்கு 08.11.2024-ல் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோரப்பட்டது.

பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகைகள் செலுத்தி இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு:-

| வ.எண். | பெயர் | மாத வாடகை ரூபாய். |
|---|---|---|
| 1. | திரு.S.மணிமாறன், எண்.16, தி.நா.சம்பந்தம் தெரு, மோகலிங்கம் நகர், குன்றத்தூர் | 35000/- (முப்பத்தி ஐந்தாயிரம்) |
| 2. | திருமதி.E.R.சங்கீதா, எண்.5, மேலாண்டை தெரு, குன்றத்தூர் | 28000/- (இருபத்தி எட்டாயிரம்) |

மேற்குறிப்பிட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் உள்ள திரு.S.மணிமாறன் என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொகை அரசாங்க மதிப்பை விட (4.47%) கூடுதலாக உள்ளதை ஏற்று குத்தகை உரிமம் வழங்குவது குறித்து மன்றம் முடிவு மேற்கொள்ளலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2054/2024/அ1)

**தீர்மானம் எண்.764 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.17**

மாண்புமிகு நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண்.23 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7628/2022/MA1 நாள்.26.12.2023ன்படி 2022-23ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் திட்டத்தின் கீழ் ரூ.150.00 லட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, பஜார் தெருவில் புதியதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே உள்ள 3 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 1982-83ல் நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு சுமார் 40 வருடங்கள் கடந்த நிலையில், தற்போது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் விரிசல் ஏற்பட்டுள்ளதால், குடிநீர் கசிவு ஏற்படுகிறது. மேலும் படிக்கட்டுகள் உடைந்து குடிநீர் பணியாளர்கள் மேலே சென்று சுத்தம் செய்வதற்கு சிரமமாக உள்ளதால், மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த அனுமதி கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1044/2023 இ1 நாள்.09.07.2024ன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1652/2023/மாதி.1 நாள்.15.11.2024ன்படி மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பஜார் தெருவில் உள்ள 3 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைநீர்த்தேக்க தொட்டியினை பாதுகாப்பான முறையில் தரை மட்ட அளவில் இடித்து அப்புறப்படுத்தி தருவதற்கு ஏல அறிவிப்பு கோருவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.4294/2024/இ1)

**தீர்மானம் எண்.765 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.18</u>

குன்றத்தூர் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பயன்பாட்டிற்கான குப்பைகள் அகற்றும் பணிக்கு 30 எண்ணிக்கையிலான பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicle) பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 20 எண்ணிக்கையிலான வாகனங்கள் மற்றும் அதற்கான பேட்டரிகள் பழுதடைந்துள்ளதால் குப்பைகளை சரிவர அகற்ற இயலாமல் பொதுசுகாதார பணிகள் பாதிக்கப்படுவதாக துப்புரவு ஆய்வாளரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனங்களை விலைப்புள்ளி கோரி பழுதுநீக்கம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.10.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு -</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2056/2024/எச்1)

**தீர்மானம் எண்.766 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.19</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.17380/2022/SBM-2 நாள்.05.06.2024ன்படி தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0-ன் கீழ் செப்டிக் டேங்க், கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் பாதாள சாக்கடை சுத்தம் செய்தல் தொடர்பாக பெறப்படும் புகார்களை பதிவு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் 14420 Helpline அழைப்பு மையம் (Call Center) அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அழைப்பு மையம் நடத்துவதற்கு ஒவ்வொரு நகராட்சியிலிருந்தும் பங்குத் தொகை செலுத்தக்கோரி வரப்பெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.895/2023/B1 நாள்.14.06.2024ன்படி ஏற்கனவே ரூ.31310/- செலுத்தப்பட்டது மற்றும் 04.12.2024 நாளிட்ட கடிதத்தின்படி தற்போது ரூ.35807/- மேற்படி அழைப்பு மையத்திற்கு செலுத்தவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை ரூ.31310/- மற்றும் தற்போதைய தொகை ரூ.35807/- ஆகியவற்றிக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2056/2024/எச்1)**

## தீர்மானம் எண்.767 நாள்.10.01.2025

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.20**

அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME.1) துறை, நாள்.09.08.2024ன்படி குன்றத்தூர் நகராட்சி ஆணையராக பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.மு.வெ.கவின்மொழி அவர்கள் தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்தில் 27.08.2024 முதல் 21.09.2024 வரை இரண்டாம் நிலை நகராட்சி ஆணையருக்கான அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியில் (Foundation Training Course for Newly Recruited Municipal Commissioners (Grade II) கலந்து கொண்டமைக்கான பயிற்சிக் கட்டணம் ரூ.20000/-ஐ தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திற்கு செல்வி.மு.வெ.கவின்மொழி அவர்களால் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் விவரப்படியான தொகை ரூ.20000/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செல்வி.மு.வெ.கவின்மொழி அவர்களுக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.4203/2024/சி1)

**தீர்மானம் எண்.768 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.21**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600028 அவர்களின் கடிதம் ந.க.எண்.29280/2016/IT நாள்.29.11.2024ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வரியினங்கள் மற்றும் அனைத்து பணிகளையும் இணையதளம் மூலம் மேற்கொள்ள E-Governance-Urban Tree Information System செயல்படுத்துவது தொடர்பாக BSNL நிறுவனத்தின் மூலம் இணையதள சேவை வழங்கியமைக்கு 01.07.2024 முதல் 30.09.2024 வரையிலான காலத்திற்கு கட்டணம் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குன்றத்தூர் நகராட்சியில் 01.07.2024 முதல் 30.09.2024 வரை UTIS செயல்படுத்தியமைக்கு கட்டணம் ரூ.47250/-ஐ கீழ்க்காணும் விவரப்படி BSNL நிறுவன வங்கி கணக்கில் செலுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு பெயர் | : | Accounts Officer (Cash), BSNL, TN Circle |
| வங்கி கணக்கு எண் | : | 4386002100014658 |
| வங்கியின் பெயர் | : | Punjab National Bank, Royapettah High Road, Chennai – 600006 |
| IFSC குறியீடு | : | PUNB0438600 |

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 4466/2023 /பி2)

**தீர்மானம் எண்.769 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.22**

குன்றத்தூர் நகராட்சியால் தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம், கோயம்புத்தூருக்கு செலுத்த வேண்டிய 2021-22, 2022-2023, 2023-2024 மற்றும் 2024-25ம் ஆண்டிற்கான சந்தா தொகை கீழ்க்காணும் விவரப்படி தொகை ரூ.1,20,000/- செலுத்தக் கோரி வரப்பெற்றுள்ள இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம், அழகேசன் ரோடு, சாய்பாபா காலனி, கோயம்புத்தூர் – 641011 அவர்களின் கடிதம் ந.க.எண்.047/2024/A2 நாள்.05.12.2024 மன்றத்தின் பார்வைக்கு மற்றும் பொதுநிதியில் தொகை செலுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புலுக்கு.

| வ.எண். | ஆண்டு | சந்தா தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2021-22 | 30000 |
| 2. | 2022-23 | 30000 |
| 3. | 2023-24 | 30000 |
| 4. | 2024-25 | 30000 |
| | **மொத்தம்** | **120000** |

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண். 3764/2024/சி1)**

**தீர்மானம் எண்.770 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.23**

குன்றத்தூர் நகராட்சியில் பணிபுரியும் அலுவலக உதவியாளர், மின் பணியாளர், குடிநீர் பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் ஆகியோருக்கு 2024-2025ம் ஆண்டிற்கு சீருடை மற்றும் காலணிகள் வாங்கி வழங்கவும், இதற்கான தோராய செலவினம் ரூ.90000/-ஐ பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.4187/2024/எச்1)**

**தீர்மானம் எண்.771 நாள்.10.01.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.24**

